நாகூம் - முன்னுரை

காலமும் இடமும்

கி.மு. 786 - 757 ஆம் வருஷத்தில் நாகூமின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

நாகூம் தீர்க்கதரிசி. (நாகூம் 1:1).

மையக்கருத்து

1. யோனாவின் காலத்திற்கு 100 வருஷங்களுக்குப் பின்பு நினிவே பட்டணத்தின் அழிவு.
2. நாகூம் தீர்க்கதரிசியின் புஸ்தகம் யோனா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தியோடு தொடர்புடையது.
3. யோனாவும், நாகூமும் முன்னறிவித்த பிரகாரம் நினிவே பட்டணம் முழுவதுமாக அழிக்கப்படுகிறது.
4. மேதியரும், பாபிலோனியரும் இந்தப் பட்டணத்தை அழித்தார்கள்.

யோனாவின் நாளில் நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். அதனால் கர்த்தர் அவர்களுக்கு இரங்கி, அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டார். ஆனால் இப்போது நினிவே பட்டணத்தார் மறுபடியும் தங்களுடைய பாவ வாழ்க்கைக்குத் திரும்பி விட்டார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறார்கள். ஆகையினால் நினிவே பட்டணத்திற்கு அழிவு நியமிக்கப்படுகிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 47

கேள்விகள் - 8

புதிய தீர்க்கதரிசனங்கள் - 2

கட்டளைகள் - 5

முன்னறிவிப்புக்கள் - 72

நாகூம் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (நாகூம் 1:2; நாகூம் 2:1).

பொருளடக்கம்

I. தேவனுடைய ஏழு குணாதிசயங்கள்

1. தலைப்பும் ஆசிரியரும் (1:1)
2. தேவனுடைய பழிவாங்குதல் (1:2)
3. நீடிய பொறுமையும் நீதியும் (1:3)
4. தேவனுடைய சர்வ வல்லமை (1:4-5)
5. தேவனுடைய பரிசுத்தம் (1:6)
6. நன்மையும் சர்வ ஞானமும் (1:7-8)

II. நினிவேயின் வரம்பு மீறுதல் (1:9-11)

III. யூதா

1. யூதாவின் மீட்பு (1:12-14)
2. ஆயிர வருஷத்தில் யூதாவின் ஊழியம் (1:15)
3. அசீரியருக்கு எதிராக யூதா உற்சாகப் படுத்தப்பட்டது (2:1-2)

IV. நினிவேயின்மீது நியாயத்தீர்ப்பு

1. வீதிகளில் யுத்தம் (2:3-6)
2. நினிவேயின் சிறையிருப்பு (2:7-8)
3. நினிவே கொள்ளையிடப்பட்டது (2:9)
4. நினிவேயின் முழுமையான அழிவு (2:10-12)
5. தேவன் அழிக்கிறார் (2:13)

V. நினிவேயின் அழிவிற்குக் காரணங்கள்

1. பொல்லாப்பும் சண்டைகளும் நிறைந்த பட்டணம் (3:1-4)
2. தேவனிடமிருந்து நியாயத்தீர்ப்பு (3:5-7)
3. நோவின்மீது நியாயத்தீர்ப்பு - எடுத்துக்காட்டு (3:8-10)
4. நினிவேக்கு இது பொருந்தும் (3:11-13)
5. ஆயத்தமாகுமாறு நினிவேக்கு அழைப்பு (3:14)
6. நினிவே பாழாக்கப்படும் (3:15-17)
7. பொல்லாப்பு (3:18-19)

நாகூம் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. தேவனுடைய ஏழு குணாதிசயங்கள்

1. தலைப்பும் ஆசிரியரும்

நாகூம் 1:1 நினிவேயின் பாரம். எல்கோசானாகிய நாகூமின் தரிசனப் புஸ்தகம்.

"நாகூம்" (Nahum) - இந்தப் பெயருக்கு "இரக்கம்" "compassionate, or full of comfort" என்று பொருள்.

"நினிவேயின் பாரம்" - சிறிய தீர்க்கதரிசிகளில் மூன்று பேர் தங்களுடைய செய்தியின் "பாரத்தைக்" "burden" குறித்து கூறுகிறார்கள். (நாகூம் 1:1; ஆப 1:1; மல் 1:1). இது நினிவேயின் பாரம். நினிவேயின்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பின் அறிவிப்பு என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இந்தப் புஸ்தகம் "நாகூமின் தரிசனம்" "the vision of Nahum" என்றும் அழைக்கப்படுகிறது.

"எல்கோசான்" (Elkoshite) - நினிவேக்கு வடக்கே 24 மைல் தூரத்தில் எல்கோசி (Elkoshi) என்னும் ஊர் அமைந்துள்ளது. நாகூம் இந்த ஊரைச் சேர்ந்தவர். இந்தப் புஸ்தகத்தில் நினிவே பட்டணத்தைப் பற்றி 3 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது (நாகூம் 1:1; நாகூம் 2:8; நாகூம் 3:7) நாகூமைப் பற்றிய செய்தி நாகூம் 3:1,18 ஆகிய வசனங்களிலும் காணப்படுகிறது. நாகூமின் காலத்திற்கு 87 வருஷங்களுக்கு முன்பு யோனா தீர்க்கதரிசி நினிவே பட்டணத்தாருக்குப் பிரசங்கம் பண்ணினார். (யோனா 1:2; யோனா 3:2-7; யோனா 4:11; செப். 2:13).

2. தேவனுடைய பழிவாங்குதல்

நாகூம் 1:2 கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிர கோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்து வைக்கிறவர்.

தீர்க்கதரிசன எண் - 1

"கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்......" (நாகூம் 1:1-15) நாகூம் 1:1-7,15 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. நாகூம் 1:8-14 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார் (நாகூம் 1:8-9).
2. இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும். (நாகூம் 1:8).
3. இடுக்கம் மறுபடியும் உண்டாகாது. (நாகூம் 1:9)
4. அவர்கள் முழுதும் காய்ந்துபோன செத்தையைப்போல எரிந்துபோவார்கள். (நாகூம் 1:10).
5. கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவு கொண்டிருக்கிற துராலோசனைக்காரன் ஒருவன் உன்னிடத்திலிருந்து புறப்பட்டான். (நாகூம் 1:11).
6. அவர்கள் சம்பூரணமடைந்து அநேகராயிருந்தாலும் அறுப்புண்டு போவார்கள் (நாகூம் 1:12).
7. உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப் படுத்தாதிருப்பேன்.
8. நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன். (நாகூம் 1:13).
9. உன் தேவர்களின் கோவிலில் இருக்கிற வெட்டப்பட்ட விக்கிரகத்தையும், வார்க்கப் பட்ட விக்கிரகத்தையும் நான் நிர்மூலம்பண்ணுவேன்; (நாகூம் 1:14).
10. நீ கனவீனனானபடியால் அதை உனக்குப் பிரேதக்குழியாக்குவேன்.

நாகூம் - தொகுப்புரை

1 அதிகாரம்

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தர் இஸ்ரவேலுக்கு நீதியைச் சரிக்கட்டுவார். (நாகூம் 1:2).
2. கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர்.
3. அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர்.
4. சத்துருக்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார். (நாகூம் 1:3).
5. அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணுவார். (நாகூம் 1:4).
6. சகல ஆறுகளையும் வறட்சியாக்குவார்.
7. பாசானும் கர்மேலும் சோர்ந்து போகும். லீபனோனின் செழிப்பு வாடிப்போகும்.
8. அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிரும். (நாகூம் 1:5).
9. மலைகள் கரைந்துபோகும்.
10. அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்.
11. அவருடைய கோபத்துக்கு முன்பாக யாராலும் நிற்க முடியாது. (நாகூம் 1:6).
12. அவருடைய எரிச்சல் அக்கினியைப்போல இறைக்கப்படும்.
13. அவராலே கன்மலைகள் பேர்க்கப்படும்.
14. சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின் மேல் வருகிறது (நாகூம் 1:15).
15. துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்துவருவதில்லை

தேவனுடைய குணாதிசயம்

1. எரிச்சலுள்ளவர். (நாகூம் 1:2)
2. நீடியசாந்தமுள்ளவர். (நாகூம் 1:3)
3. நீதியுள்ளவர்
4. சர்வ வல்லவர் (நாகூம் 1:4-5)
5. பரிசுத்தவர் (நாகூம் 1:6)
6. நல்லவர் (நாகூம் 1:7)
7. சர்வ ஞானமுள்ளவர்

3. நீடிய பொறுமையும் நீதியும்

நாகூம் 1:3 கர்த்தர் நீடியசாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார்; கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது.

“நீடியசாந்தம்” - மனுஷன் முன்கோபம் உடையவன். மனுஷனுக்கு பொறுமை மிகவும் குறைவாகவே உள்ளது. தேவனும் மனுஷனைப் போல முன்கோபத்துடன் இருப்பாரென்றால் சர்வ உலகமும் அழிந்துபோகும். ஆனால் கர்த்தரோ நீடிய சாந்தமுள்ளவராக இருக்கிறார். கோபப்படுவதற்குத் தாமதிக்கிறார். நியாயம் தீர்ப்பதற்கு முன்பாக அவர்களுடைய எல்லாக் காரியங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறார். தம்முடைய கிரியையை வெளிப்படுத்தும்போது நீதியாகவும், இரக்கமாகவும் தீர்மானம் பண்ணுகிறார். கர்த்தர் நீடிய சாந்தமுள்ளவர் என்று 6 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (நாகூம் 1:3; நெகே 9:17; சங் 103:8; சங் 145:8; யோவே 2:13; யோனா 4:2). மனுஷரும் கோபிக்கிறதற்குத் தாமதமாய் இருக்க வேண்டும். (யாக் 1:19). நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமானாக இருக்கிறான். (நீதி 14:29) அவன் சண்டையை அமர்த்துகிறான். (நீதி 15:18) நீடிய சாந்தமுள்ளவன் பலவானைப் பார்க்கிலும் உத்தமன். (நீதி 16:32).

நாகூம் - தொகுப்புரை

1 அதிகாரம்

தேவனைப் பற்றிய சத்தியம்

1. உக்கிரகோபமுள்ளவர் (நாகூம் 1:2)
2. எரிச்சலுள்ளவர்.
3. கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர் (நாகூம் 1:2-3).
4. அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர். (நாகூம் 1:2).
5. நீடியசாந்தமுள்ளவர் (நாகூம் 1:3).
6. மிகுந்த வல்லமையுமுள்ளவர்.
7. துன்மார்க்கனை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார்.
8. கர்த்தருடைய வழி சுழல்காற்றில் இருக்கிறது.
9. கர்த்தருடைய வழி பெருங்காற்றில் இருக்கிறது.
10. மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது.
11. அவர் சமுத்திரத்தை அதட்டுகிறார். (நாகூம் 1:4).
12. சமுத்திரத்தை வற்றிப்போகப் பண்ணுகிறார்.
13. சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார்.
14. பூமியதிர்ச்சிகளை உண்டாக்குகிறார். (நாகூம் 1:5-6).
15. பூமியைப் புதுப்பிக்கிறார். (நாகூம் 1:5).
16. அவருடைய கோபத்துக்கு முன்பாக யாராலும் நிற்க முடியாது(நாகூம் 1:6).
17. கர்த்தர் நல்லவர் (நாகூம் 1:7).
18. அவர் இக்கட்டு நாளிலே அரணான கோட்டை.
19. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.
20. தேவைப்படும்போது நியாயந்தீர்க்கிறார். (நாகூம் 1:8-14)

4. தேவனுடைய சர்வ வல்லமை

நாகூம் 1:4 அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணி, சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார்; பாசானும் கர்மேலும் சோர்ந்து, லீபனோனின் செழிப்பு வாடிப்போகும்.

நாகூம் 1:5 அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்துபோகும்; அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்.

"அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணி" - கர்த்தருடைய சர்வ வல்லமை இங்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தரால் சகலத்தையும் செய்ய முடியும். ஒருசில நியாயத்தீர்ப்புகளை உண்டு பண்ணுவதற்காகக் கர்த்தர் கடந்த காலங்களில் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். வருங் காலத்திலும், நியாயத்தீர்ப்பை உண்டு பண்ணுவதற்காக பெரிய காரியங்களைச் செய்வார். கர்த்தர் சமுத்திரத்தை ஏற்கெனவே கடிந்து கொண்டார். (சங் 104:7) அதை வற்றிப்போகப் பண்ணினார். (யாத் 14:12) ஆறுகளை வற்றிப்போகப் பண்ணினார். (யோசு 3:17; 2இராஜா 2:8,14) பாசான், கர்மேல், லீபனோன் ஆகியவற்றிற்குப் பஞ்சத்தை அனுப்பினார். (2சாமு 21:1; 2இராஜா 6:25). பர்வதங்கள் அதிர்ந்தது. (யாத் 19:18; 1சாமு 14:15; 1இராஜா 19:11) பூமி அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது. மனுஷர்கள் அழிக்கப்பட்டார்கள்.(ஆதி 19:24; 1இராஜா 19:12) வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும். (எபி 12:18-28; 2பேதுரு 3:10-13; வெளி 6:12-17; வெளி. 8:1-12; வெளி. 9:1-21; வெளி. 11:13; வெளி 16:17-21; வெளி. 18:1-24).

"அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்" - (ஆதி 41:56) அனைவரும் என்பது பொதுவான வார்த்தையாகும்.

1 அதிகாரம்

5. தேவனுடைய பரிசுத்தம்

நாகூம் 1:6 அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிரகோபத்திலே தரிப்பவன் யார்? அவருடைய எரிச்சல் அக்கினியைப்போல இறைக்கப் படுகிறது; அவராலே கன்மலைகள் பேர்க்கப்படும்.

"அவருடைய எரிச்சல் அக்கினியைப்போல இறைக்கப்படுகிறது" - வருங்காலத்தில் வானமும், பூமியும் அக்கினியினால் புதுப்பிக்கப் படும். (நாகூம் 1:4-5,எபி 1:10-12; எபி 12:25-28; 2பேதுரு 3:10-13; வெளி 20:7-10)

6. நன்மையும் சர்வ ஞானமும்

நாகூம் 1:7 கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.

நாகூம் 1:8 ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார்; இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்.

இக்கட்டு நாளில் ஆறுதல் செய்யும் சத்தியம்

1. கர்த்தர் நல்லவர் (நாகூம் 1:7).
2. இக்கட்டு நாளிலே நமக்கு அரணான கோட்டையாக இருக்கிறார்.
3. தம்மை நம்புகிறவர்களை அவர் அறிந்திருக்கிறார்.

"புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வ சங்காரம்பண்ணுவார்" - நினிவேயின் பாரம் இங்கு ஆரம்பமாகிறது. நினிவே பட்டணத்தார் கர்த்தருக்கு விரோதமாகத் தீங்கு செய்ய நினைக்கிறார்கள். நினிவே பட்டணத்தின்மீது அழிவு முன்னறிவிக்கப் படுகிறது. (நாகூம் 1:8-9).

II. நினிவேயின் வரம்பு மீறுதல் - (ஏசா 10:7-11; 36:4-22; 37:3-9)

நாகூம் 1:9 நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகச் செய்ய நினைக்கிறதென்ன? அவர் சர்வசங்காரம் பண்ணுவார்; இடுக்கம் மறுபடியும் உண்டாகாது.

நாகூம் 1:10 அவர்கள் சன்ன பின்னலாயிருக்கிற முட்செடிகளுக்கு ஒப்பாயிருக்கையிலும், தங்கள் மதுபானத்தினால் வெறி கொண்டிருக்கையிலும், அவர்கள் முழுதும் காய்ந்துபோன செத்தையைப்போல எரிந்துபோவார்கள்.

நாகூம் 1:11 கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவுகொண்டிருக்கிற துராலோசனைக்காரன் ஒருவன் உன்னிடத்திலிருந்து புறப்பட்டான்.

"இடுக்கம் மறுபடியும் உண்டாகாது" - நினிவே முதல் முறை அழிக்கப்படும்போது முழுவதுமாக அழிக்கப்பட்டு விடும். ஆகையினால் அது மற்றொரு முறை அழிக்கப்படுவதற்குத்தேவை எதுவுமிருக்காது.

"கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவுகொண்டிருக்கிற துராலோசனைக் காரன்" - சனகெரிப் எருசலேம் பட்டணத்தை எளிதாகக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் கர்த்தர் அவனுடைய சேனையில் 1,85,000பேரைக் கொன்று போட்டார். சனகெரிப் எருசலேமைப் பிடிக்காமல், அசீரியாவிற்குத் திரும்பிப் போய்விட்டான். (ஏசா 37:36-38).

"ஒருவன் உன்னிடத்திலிருந்து புறப்பட்டான்" - இந்த வாக்கியம் சனகெரிப்பைக் குறிப்பிடுகிறது. இவன் எசேக்கியாவின் நாட்களில் யூதாவுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினான். (2இராஜா 18:13-19:37; ஏசா 36:1-37:38).

III. யூதா

1. யூதாவின் மீட்பு

நாகூம் 1:12 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:அவர்கள் சம்பூரண மடைந்து அநேகராயிருந்தாலும் அறுப்புண்டு போவார்கள்; அவன் ஒழிந்து போவான்; உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன்.

நாகூம் - தொகுப்புரை

1 அதிகாரம்

நாகூம் 1:13 இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன்.

நாகூம் 1:14 உன்னைக்குறித்துக் கர்த்தர் கட்டளைகொடுத்திருக்கிறார்; இனி உன்பேருக்கு வித்துவிதைக்கப் படுவதில்லை; உன் தேவர்களின் கோவிலில் இருக்கிற வெட்டப்பட்ட விக்கிரகத்தையும், வார்க்கப்பட்ட விக்கிரகத்தையும் நான் நிர்மூலம் பண்ணுவேன்; நீ கனவீனனானபடியால் அதை உனக்குப் பிரேதக்குழியாக்குவேன்.

"அறுப்புண்டு போவார்கள்" - மூலபாஷையில் "அவன் கடந்துபோகும்போது அவர்கள் அறுப்புண்டு போவார்கள்" **"shall they be cut down, when he shall pass through"** என்று பொருள்படுமாறு உள்ளது. சனகெரிப் யூதாவின் வழியாகக் கடந்து செல்லும்போது அவனுடைய சேனையில் உள்ளவர்கள் அறுப்புண்டு போவார்கள். (ஏசா 37:26-38).

"உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன்." - கர்த்தர் யூதாவைச் சிறுமைப்படுத்தியிருக்கிறார். ஆயினும் இனிமேல் அவர் அசீரியர் மூலமாக யூதாவைச் சிறுமைப்படுத்தமாட்டார். யூதாவின் மேலிருக்கிற அசீரியரின் நுகத்தைக் கர்த்தர் முறிப்பார். யூதர்களுடைய கட்டுக்களை அறுப்பார்.

"இனி உன்பேருக்கு வித்து விதைக்கப் படுவதில்லை" - சனகெரிப் நினிவேயின் அரச வம்சத்தைச் சேர்ந்தவன். அந்த வம்சம் சனகெரிப்போடு முடிவு பெறுகிறது.

"உன் தேவர்களின் கோவிலில் இருக்கிற வெட்டப்பட்ட விக்கிரகத்தையும், வார்க்கப்பட்ட விக்கிரகத்தையும் நான் நிர்மூலம்பண்ணுவேன்" - சனகெரிப் தன்னுடைய தேவர்களுடைய கோவிலில் கொலைசெய்யப்பட்டான். அவனுடைய குமாரரே அவனைக் கொன்று போட்டார்கள். (ஏசா 37:37-38).

2. ஆயிர வருஷத்தில் யூதாவின் ஊழியம் - (ஏசா 52:7; 61:6; 66:19; சக 8:23)

நாகூம் 1:15 இதோ, சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை; அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.

"சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள்" - ஏசாயாவும் இந்தச் சத்தியத்தை முன்னறிவித்திருக்கிறார். ஆயிரம் வருஷ அரசாட்சிக்காலத்தில் ஊழியம் செய்கிற சுவிசேஷகருடைய கால்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (ஏசா 52:7).

"யூதா" - நாகூமின் காலத்தில் யூதா மட்டுமே இருக்கிறது. நினிவேயைக் குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் போது எப்பிராயீம் தேசத்தார் ஏற்கெனவே சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள்.

"துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை; அவன் முழுவதும் சங்கரிக்கப் பட்டான்" - இந்த வாக்கியம் கடைசி நாளின் அசீரியனாகிய அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கிறது. (2தெச. 2:8).

2 அதிகாரம்

3. அசீரியருக்கு எதிராக யூதா உற்சாகப்படுத்தப்பட்டது

நாகூம் 2:1 சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்; அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல்பண்ணு, அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள், உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து,

நாகூம் 2:2 வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை வெறுமையாக்கி, அவர்களுடைய திராட்சக்கொடிகளைக் கெடுத்துப்போட்டாலும், கர்த்தர் யாக்கோபின் மகிமையைத் திரும்பிவரப் பண்ணுவதுபோல், இஸ்ரவேலின் மகிமையையும் திரும்பிவரப்பண்ணுவார்.

"சிதறடிக்கிறவன்" - மேதிய தேசத்து ராஜாவான கையாகோரேசும் **(Cyaxares)**, பாபிலோனின் ராஜாவான நேபோபொலோசரும் நினிவேயைச் சிதறடித்தார்கள். நேபோபொலோசர் நேபுகாத்நேச்சாரின் தகப்பனாவார்.

தீர்க்கதரிசன எண் - 2

"சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்......" (நாகூம் 2:1-3:19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான் (நாகூம் 2:1).

2. கர்த்தர் யாக்கோபின் மகிமையைத் திரும்பி வரப்பண்ணுவதுபோல், இஸ்ரவேலின் மகிமையையும் திரும்பிவரப் பண்ணுவார். (நாகூம் 2:2).

3. வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை வெறுமையாக்கி, அவர்களுடைய திராட்சக் கொடிகளைக் கெடுத்துப்போடுவார்கள்.

4. அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடகம் இரத்தமயமாகும் (நாகூம் 2:3).

5. அவனுடைய யுத்தவீரர் இரத்தாம்பரந் தரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

6. அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் ஜீவாலிக்கிற கட்கங்களை உடையதாயிருக்கும்.

7. இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி, வீதிகளில் இடசாரி வலசாரி வரும்; (நாகூம் 2:4).

8. அவைகள் தீவட்டிகளைப்போல விளங்கும்.

9. மின்னல்களைப்போல வேகமாய்ப் பறக்கும்.

10. அவன் தன் பிரபலஸ்தரை நினைவு கூருவான். (நாகூம் 2:5).

11. அவர்கள் தங்கள் நடைகளில் இடறுவார்கள்.

12. அலங்கத்துக்கு விரைந்து ஓடுவார்கள்.

13. மறைவிடம் ஆயத்தப்படுத்தப்படும்.

14. ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும், அரமனை கரைந்துபோம்.(நாகூம் 2:6).

15. அவன் (ஊசாப் ராணி - **Huzzab**) சிறைப்பட்டுப்போகத் தீர்மானமாயிற்று. (நாகூம் 2:7).

16. அவளுடைய தாதிமார்கள் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு, புறாக்களைப் போலச் சத்தமிட்டுக் கூடப்போவார்கள். (நாகூம் 2:7).

17. நினிவே பூர்வகாலமுதல் தண்ணீர்த் தடாகம்போல் இருந்தது. இப்போதோ அவர்கள் ஓடிப்போகிறார்கள். (நாகூம் 2:8).

18. நில்லுங்கள் நில்லுங்கள் என்றாலும், திரும்பிப்பார்க்கிறவன் இல்லை.

19. வெள்ளியையும், பொன்னையும் கொள்ளையிட்டார்கள். அவளுடைய சம்பத்துக்கு முடிவில்லை.(நாகூம் 2:9).

நாகூம் - தொகுப்புரை

2 அதிகாரம்

20. அவள் வெறுமையும் வெளியும் பாழுமாவாள் (நாகூம் 2:10).

21. மனம் கரைந்துபோகிறது; முழங்கால்கள் தள்ளாடுகிறது.

22. எல்லா இடுப்புகளிலும் மிகுந்த வேதனை உண்டு; எல்லாருடைய முகங்களும் கருகிப்போகிறது.

23. நான் உனக்கு விரோதமாக வந்து, இரதங்களைப் புகையெழும்ப எரித்துப் போடுவேன் (நாகூம் 2:13).

24. பட்டயம் உன் பாலசிங்கங்களைப் பட்சிக்கும்.

25. நீ இரைக்காகப் பிடிக்கும் வேட்டையை தேசத்தில் அற்றுப்போகப் பண்ணுவேன்.

26. உன் ஸ்தானாபதிகளின் சத்தம் இனிக் கேட்கப்படுவதில்லை.

27. வெட்டுண்டவர்களின் திரளும், பிரேதங்களின் ஏராளமும் அங்கே உண்டாயிருக்கும் (நாகூம் 3:3).

28. பிணங்களுக்குத் தொகையில்லை; அவர்கள் பிணங்களில் இடறி விழுகிறார்கள்.

29. நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத்தையும், ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணுவேன். (நாகூம் 3:5).

30. உன்மேல் தீட்டானவைகளை எறிந்து, உன்னைக் கனவீனப்படுத்துவேன். (நாகூம் 3:6)

31. உன்னைவேடிக்கையாக்கிப்போடுவேன்.

32. உன்னைக் காண்கிறவனெல்லாம் உன்னை விட்டோடிப்போவான். (நாகூம் 3:7).

33. நினிவே பாழாய்ப்போகும்.

34. நீயும் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய் (நாகூம் 3:11)

35. உன் அரண்களெல்லாம் முதல் பழுக்கும் பழங்களுள்ள அத்திமரங்களைப்போல் இருக்கும் (நாகூம் 3:12).

36. உன் நடுவில் இருக்கிற ஜனங்கள் பேடிகளாக இருப்பார்கள்.(நாகூம் 3:13).

37. உன் தேசத்தின் வாசல்கள் உன் சத்துருவுக்குமுன் திறவுண்டுபோகும்.

38. அக்கினி உன் தாழ்ப்பாள்களைப் பட்சிக்கும்.

39. அக்கினி உன்னைப் பட்சிக்கும் (நாகூம் 3:15).

40. பட்டயம் உன்னைச் சங்கரிக்கும்.

41. உன் தலைவர்கள் ஓடிப்போவார்கள். (நாகூம் 3:16).

42. உன் மகுடவர்த்தனர் புழுதியில் தங்கியிருப்பார்கள்.

43. உன் ஜனங்கள் பர்வதங்களின்மேல் சிதறியிருப்பார்கள். (நாகூம் 3:18).

44. அவைகளைக் கூட்டிச் சேர்ப்பவன் இருக்கமாட்டான்.

45. உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை (நாகூம் 3:19).

46. உன் காயம் கொடியது.

47. உன் செய்தியைக் கேட்பவர் யாவரும் உன்பேரில் கைகொட்டுவார்கள்.

IV. நினிவேயின்மீது நியாயத்தீர்ப்பு - (2:3-13)

1. வீதிகளில் யுத்தம்

நாகூம் 2:3 அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடகம் இரத்தமயமாகும்; அவனுடைய யுத்தவீரர் இரத்தாம்பரந் தரித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் ஜீவாலிக்கிற கட்கங்களை உடையதாயிருக்கும்; ஈட்டிகள் குலுங்கும்.

2 அதிகாரம்

நாகூம் 2:4 இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி, வீதிகளில் இடசாரி வலசாரி வரும்; அவைகள் தீவட்டிகளைப் போல விளங்கி, மின்னல்களைப்போல வேகமாய்ப் பறக்கும்.

நாகூம் 2:5 அவன் தன் பிரபலஸ்தரை நினைவுகூருவான்; அவர்கள் தங்கள் நடைகளில் இடறி, அலங்கத்துக்கு விரைந்து ஓடுவார்கள்; மறைவிடம் ஆயத்தப்படுத்தப்படும்.

நாகூம் 2:6 ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும்,அரமனை கரைந்துபோம்.

"அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடகம் இரத்தமயமாகும்" - மேதிய-பாபிலோனிய தேசத்து சேனையிலுள்ளவர்கள் தங்கள் கேடகங்களுக்குச் சிவப்பு வர்ணம் பூசியிருப்பார்கள். அவர்களுடைய யுத்தவீரர் இரத்தாம்பரம் தரித்துக்கொண்டிருப்பார்கள்.(நாகூம் 2:3-4).

"அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே" - மேதிய-பாபிலோனிய தேசத்தின் சேனைத்தலைவன் நினிவே பட்டணத்தைப் பிடிப்பதற்கு ஆயத்தம் பண்ணும் நாள்.

"இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி" - மேதிய-பாபிலோனிய தேசத்தின் சேனை வீரர்கள் நினிவேயின் தெருக்களில் தங்கள் இரதங்களில் வருவார்கள். இரதங்கள் அதன் வீதிகளில் வேகமாக வரும். சூரியனின் வெளிச்சம் அந்த இரதங்கள்மீது படும்போது அந்த இரதங்கள் தீவட்டிகளைப்போல ஜுவாலிக்கும்.

"அவன் தன் பிரபலஸ்தரை நினைவுகூருவான்" - அசீரியாவின் ராஜா யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான். (நாகூம் 3:18) நினிவேயின் ஜனங்கள் அசீரியாவின் சேனைகளைப் பார்க்கும்போது தங்கள் நடைகளில் இடறி, அலங்கத்துக்கு விரைந்து ஓடுவார்கள். தங்களுக்கு மறைவிடத்தை ஆயத்தப்படுத்திக் கொள்வார்கள்.

"ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும்" - நினிவே பட்டணத்தின்மீது வெள்ளம் பிரவாகித்து வரும். (நாகூம் 1:8) டைகிரீஸ் நதி நினிவே பட்டணத்தின்மீது வெள்ளமாகப் பிரவாகித்து வந்து, அந்தப் பட்டணத்தை அழித்துப் போட்டது என்று வரலாறு கூறுகிறது. தங்களுடைய பட்டணம் வெள்ளத்தினால் அழிக்கப்படும் என்று நினிவேயின் ராஜாவிற்கு ஏற்கெனவே தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார்கள். இதனால் தன்னுடைய பட்டணத்தின்மீது வெள்ளம் வந்தபோது ராஜாவின் நம்பிக்கையெல்லாம் அற்றுப் போயிற்று. நினிவேயின் ராஜா தன்னுடைய ஜனங்களெல்லாம்அழிந்துவிடுவார்கள் என்று நினைத்து, தன்னுடைய அரமனையில் பெரிய தீயை வளர்த்து, அதில் தன் மனைவிகளையும்,மறுமனையாட்டிகளையும், அரமனை ஆட்களையும், எரித்துக் கொன்றுபோட்டு, தானும் அந்தத் தீயில் விழுந்து, செத்துப் போனான் என்று வரலாறு கூறுகிறது. (நாகூம் 2:8,நாகூம் 3:13,15)

2. நினிவேயின் சிறையிருப்பு

நாகூம் 2:7 அவன் சிறைப்பட்டுப்போகத் தீர்மானமாயிற்று; அவளுடைய தாதிமார்கள் தங்கள் மார்பிலே அடித்துக்கொண்டு, புறாக்களைப்போலச் சத்தமிட்டுக் கூடப்போவார்கள்.

நாகூம் 2:8 நினிவே பூர்வகாலமுதல் தண்ணீர்த் தடாகம்போல் இருந்தது; இப்போதோ அவர்கள் ஓடிப்போகிறார்கள்; நில்லுங்கள் நில்லுங்கள் என்றாலும், திரும்பிப்பார்க்கிறவன் இல்லை.

"அவன் சிறைப்பட்டுப்போகத் தீர்மானமாயிற்று" - மூலபாஷையில் "ஊசாப் சிறைப்பட்டுப்போகத் தீர்மானமாயிற்று" **"Huzzab shall be led away captive"** என்று உள்ளது. ஊசாப் என்பது நினிவேயின் ராணியைக் குறிக்கும். ராஜா வளர்த்த தீயில் இவள் விழாமல் தப்பித்துப் போனாள் என்று நினிவேயின் வரலாறு கூறுகிறது. இவள் ராஜாவோடு தீயில் செத்துப்போனதற்கு ஆதாரம் எதுவுமில்லை.

நாகூம் - தொகுப்புரை

2 அதிகாரம்

3. நினிவே கொள்ளையிடப்பட்டது

நாகூம் 2:9 வெள்ளியைக் கொள்ளையிடுங்கள், பொன்னையும் கொள்ளையிடுங்கள்; சம்பத்துக்கு முடிவில்லை; இச்சிக்கப்படத்தக்க சகலவித பொருள்களும் இருக்கிறது.

"வெள்ளியைக் கொள்ளையிடுங்கள்" - நினிவேயின் சம்பத்தெல்லாம் கொள்ளையிடப் படுகிறது.

4. நினிவேயின் முழுமையான அழிவு

நாகூம் 2:10 அவள் வெறுமையும் வெளியும் பாழுமாவாள்; மனம் கரைந்துபோகிறது; முழங்கால்கள் தள்ளாடுகிறது; எல்லா இடுப்புகளிலும் மிகுந்த வேதனை உண்டு; எல்லாருடைய முகங்களும் கருகிப்போகிறது.

நாகூம் 2:11 சிங்கங்களின் வாசஸ்தலம் எங்கே? பாலசிங்கம் இரைதின்கிற இடம் எங்கே? கிழச்சிங்கமாகிய சிங்கமும், சிங்கக்குட்டிகளும் பயப் படுத்துவாரில்லாமல் சஞ்சரிக் கிறஸ்தானம் எங்கே?

நாகூம் 2:12 சிங்கம் தன் குட்டிகளுக்குத் தேவையானதைப் பீறி, தன் பெண் சிங்கங்களுக்கு வேண்டியதைத் தொண்டையைப் பிடித்துக் கொன்று, இரைகளினால் தன் கெபிகளையும், பீறிப் போட்டவைகளினால் தன் தாபரங்களையும் நிரப்பிற்று.

"சிங்கங்களின் வாசஸ்தலம்" - நினிவே சிங்கங்களின் வாசஸ்தலம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு சிங்கமும், சிங்கக்குட்டிகளும் பயப்படுத்துவாரில்லாமல் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். (நாகூம் 2:11-12) கர்த்தர் சிங்கத்தின் கெபிகளையும், அதிலுள்ள பாலசிங்கங்களையும் அழித்துப்போடுவதாக வாக்குப்பண்ணுகிறார். (நாகூம் 2:13).

5. தேவன் அழிக்கிறார்

நாகூம் 2:13 இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து, இரதங்களைப் புகையெழும்ப எரித்துப்போடுவேன்; பட்டயம் உன் பாலசிங்கங்களைப் பட்சிக்கும்; நீ இரைக்காகப் பிடிக்கும் வேட்டையை தேசத்தில் அற்றுப்போகப் பண்ணுவேன்; உன் ஸ்தானாபதிகளின் சத்தம் இனிக் கேட்கப்படுவதில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் உனக்கு விரோதமாக வந்து" - கர்த்தர் நினிவேக்கு விரோதமாக வருவார்.

நாகூம் - தொகுப்புரை

3 அதிகாரம்

நினிவேயின் அழிவிற்குக் காரணங்கள்

1. பொல்லாப்பும் சண்டைகளும் நிறைந்த பட்டணம்

நாகூம் 3:1 இரத்தப்பழிகளின் நகரத்திற்கு ஐயோ! அது வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; கொள்ளை ஓயாமல் நடக்கிறது.

நாகூம் 3:2 சவுக்குகளின் ஓசையும், உருளைகளின் அதிர்ச்சியும், குதிரைகளின் பாய்ச்சலும், இரதங்கள் கடகடவென்று ஓடுகிற சத்தமும்,

நாகூம் 3:3 வீரர் குதிரை ஏறுகிறதும், பட்டயங்கள் துலங்குகிறதும், ஈட்டிகள் மின்னுகிறதும், வெட்டுண்டவர்களின் திரளும், பிரேதங்களின் ஏராளமும் அங்கே உண்டாயிருக்கும்; பிணங்களுக்குத் தொகையில்லை; அவர்கள் பிணங்களில் இடறிவிழுகிறார்கள்.

நாகூம் 3:4 தன் வேசித்தனங்களினால் ஜாதிகளையும், தன் சூனியங்களினால் வம்சங்களையும் விற்கிற மகா சூனியக்காரியும் ரூபவதியுமாயிருக்கிற வேசியினுடைய திரளான வேசித்தனங்களினிமித்தம்,

நினிவேயின் அழிவிற்குக் காரணம்

1. இரத்தப்பழிகளின் நகரம். (நாகூம் 3:1)
2. நினிவே வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும்நிறைந்திருக்கிறது.
3. நினிவேயில் கொள்ளை ஓயாமல் நடக்கிறது.
4. மற்றவர்களைக் கொள்ளையிட யுத்தம் பண்ணுகிறது.
5. நினிவேயில் வேசித்தனம் நிறைந்திருக்கிறது. (நாகூம் 3:4)
6. சூனியங்கள் நிறைந்திருக்கிறது.
7. நினிவேயின் ஜனங்கள் மதுபானத்தினால் வெறிகொண்டிருக்கிறார்கள். (நாகூம் 3:11)
8. மற்றவர்களை ஒடுக்குகிறார்கள். (நாகூம் 3:19)

"சவுக்குகளின் ஓசை" - குதிரைகளை ஒட்டுவதற்காக யுத்த வீரர்கள் சவுக்களைப் பயன்படுத்துகிறார்கள். (நாகூம் 3:2-4). அசீரியருக்கும், மேதிய-பாபிலோனிய தேசத்தாருக்கும் இடையில் நடைபெறும் யுத்தம் இங்கு விவரிக்கப்படுகிறது. (நாகூம் 2:1-7, நாகூம் 3:2-3,நாகூம் 3:13,15)

2. தேவனிடமிருந்து நியாயத்தீர்ப்பு

நாகூம் 3:5 இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத்தையும், ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணி,

நாகூம் 3:6 உன்மேல் தீட்டானவைகளை எறிந்து, உன்னைக் கனவீனப்படுத்தி, உன்னை வேடிக்கையாக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

நாகூம் 3:7 அப்பொழுது உன்னைக் காண்கிறவனெல்லாம் நினிவே பாழாய்ப்போயிற்று, அதற்காகப் புலம்புகிறவர் யார்? ஆறுதல் சொல்லுகிறவர்களை உனக்கு எங்கே தேடுவேனென்று சொல்லி, உன்னை விட்டோடிப்போவான்.

"ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணி" - நினிவே பட்டணத்தில் விக்கிரகாராதனையும், வேசித்தனமும் நிறைந்திருக்கிறது. எல்லா தேசங்களுக்கும் முன்பாக அவளுடைய நிர்வாணமும், மானமும் வெளிப்படுத்தப்படும்.(நாகூம் 3:5-7).

"நினிவே பாழாய்ப்போயிற்று" - யோனாவின் காலத்திற்கு நூறு வருஷங்களுக்குப் பின்பு நினிவே பாழாய்ப்போயிற்று. நினிவேக்கு எதிராகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நாகூம் 3:7,13,15; நாகூம் 2:13).

3 அதிகாரம்

3. நோவின்மீது நியாயத்தீர்ப்பு - எடுத்துக்காட்டு

நாகூம் 3:8 நதிகள் மத்தியிலிருந்த நோஅம்மோனைப்பார்க்கிலும் நீ சிரேஷ்டமோ? அதைச் சுற்றிலும் தண்ணீர் இருந்தது; சமுத்திரம் அதின் அரணும், சமுத்திரக்கால் அதின் மதிலுமாயிருந்தது.

நாகூம் 3:9 எத்தியோப்பியாவும் எகிப்தும் எண்ணிறந்த சேனையால் அதற்குப் பெலனாக இருந்தது; பூத்தும் லூபீமும் அதற்குச் சகாயமாயிருந்தது.

நாகூம் 3:10 ஆயினும் அவள் குடிவிலக்கப்பட்டுச் சிறையிருப்பிலே கொண்டுபோகப்பட்டாள்; அவள் குழந்தைகள் எல்லா வீதிகளின் முனைகளிலும் மோதியடிக்கப்பட்டார்கள்; அவளுடைய கனவான்கள் பேரில் சீட்டுப்போட்டார்கள்; அவளுடைய பெரியவர்கள் எல்லாரும் சங்கிலிகளால் கட்டப்பட்டார்கள்.

"நோஅம்மோனைப்பார்க்கிலும் நீ சிரேஷ்டமோ?" - அசீரியர் 60 வருஷங்களுக்கு முன்பு எகிப்தைக் கைப்பற்றினார்கள். எகிப்தின் நோவைவிட நினிவே மேன்மையானவர்கள் அல்ல. அசீரியர் நோவின் புத்திரரைச் சிறைப்பிடித்தார்கள். நோ விழுந்தது என்றால் நினிவேயும் விழும். அசீரியர் எகிப்தையும், எத்தியோப்பியாவையும் பிடித்தார்கள். (நாகூம் 3:9-10).

எண்ணிறந்த காரியங்கள்

1. எத்தியோப்பியா, எகிப்து ஆகியவர்களின் சேனைகள் (நாகூம் 3:9)
2. யோபுவின் பாவங்கள் (யோபு 22:5)
3. கர்த்தருடைய அறிவு (சங் 147:5)

4. நினிவேக்கு இது பொருந்தும்

நாகூம் 3:11 நீயும் வெறிகொண்டு ஒளித்துக்கொள்வாய்; நீயும் உன் சத்துருவுக்குத்தப்ப அரணான கோட்டையைத் தேடுவாய்.

நாகூம் 3:12 உன் அரண்களெல்லாம் முதல் பழுக்கும் பழங்களுள்ள அத்திமரங்களைப்போல் இருக்கும்; அவைகள் குலுக்கப்பட்டால் அவைகளின் பழம் தின்கிறவன் வாயிலே விழும்.

நாகூம் 3:13 இதோ, உன் நடுவில் இருக்கிற ஜனங்கள் பேடிகள்; உன் தேசத்தின் வாசல்கள் உன் சத்துருவுக்கு முன் திறவுண்டுபோகும்; அக்கினி உன் தாழ்ப்பாள்களைப் பட்சிக்கும்.

"நீயும் வெறிகொண்டு ஒளித்துக்கொள்வாய்" - நாகூம் 3:8-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகளைக் கர்த்தர் நினிவேக்குப் பயன்படுத்துகிறார். நினிவே அழிக்கப்படும். நினிவேயின் ஜனங்கள் சிறைப்பிடிக்கப்படுவார்கள். (நாகூம் 3:11-19) நினிவேயிலுள்ள யுத்த வீரர்கள் பேடிகளைப் போல இருப்பார்கள். (நாகூம் 3:13) நினிவே யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணிய போதிலும் அது அழிந்துபோகும். (நாகூம் 3:14-19) அக்கினி நினிவேயைப் பட்சிக்கும். நினிவேயின் ஜனங்களைப் பட்டயம் சங்கரிக்கும். (நாகூம் 3:15) நினிவேயிலுள்ள வர்த்தகரும், மகுடவர்த்தனரும் வெட்டுக்கிளிகளைப்போல ஓடிப்போய்விடுவார்கள். (நாகூம் 3:17-18) நினிவேயின் ஜனத்தார் பர்வதங்களின்மேல் சிதறியிருப்பார்கள். (நாகூம் 3:18).

5. ஆயத்தமாகுமாறு நினிவேக்கு அழைப்பு

நாகூம் 3:14 முற்றிகைக்குத் தண்ணீர் மொண்டு வை, உன் அரண்களைப் பலப்படுத்து; சேற்றிலே போய்க் களிமண்ணை மிதி, சூளையைக் கெட்டிப்படுத்து.

நாகூம் - தொகுப்புரை

3 அதிகாரம்

6. நினிவே பாழாக்கப்படும் (3:15-17)

நாகூம் 3:15 அங்கே அக்கினி உன்னைப் பட்சிக்கும், பட்டயம் உன்னைச் சங்கரிக்கும்; அது பச்சைக்கிளிகளைப் போல் உன்னைப் பட்சித்துப்போடும்; உன்னைப் பச்சைகிளிகளத்தனையாக்கிக் கொள், உன்னை வெட்டுக்கிளி களத்தனையாக்கிக் கொள்.

நாகூம் 3:16 உன் வர்த்தகரை வானத்து நட்சத்திரங்களிலும் அதிகமாக்கினாய்; இந்தப் பச்சைக்கிளிகள் பரவிப் பறந்துபோகும்.

நாகூம் 3:17 உன் மகுடவர்த்தனர் வெட்டுக்கிளிகளுக்கும், உன் தளகர்த்தர் பெருங்கிளிகளுக்கும் சமானமாயிருக்கிறார்கள்; அவைகள் குளிர்ச்சியான நாளில் வேலிகளில் பாளையமிறங்கி, சூரியன் உதித்த மாத்திரத்தில் பறந்துபோம்; பின்பு அவைகள் இருக்கும் இடம் இன்னதென்று தெரியாது.

7. பொல்லாப்பு

நாகூம் 3:18 அசீரியா ராஜாவே, உன் மேய்ப்பர்கள் உறங்குவார்கள்; உன் பிரபலஸ்தர் படுத்திருப்பார்கள்; உன் ஜனங்கள் பர்வதங்களின்மேல் சிதறியிருக்கிறார்கள், அவைகளைக் கூட்டிச் சேர்ப்பவன் இல்லை.

நாகூம் 3:19 உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை; உன் காயம் கொடியது; உன் செய்தியைக் கேட்பவர் யாவரும் உன்பேரில் கைகொட்டுவார்கள்; உன் பொல்லாப்பு எந்நேரமும் யார்பேரிலேதான் பாயாமற்போயிற்று?

"உன் நொறுங்குதலுக்குப் பரிகாரம் இல்லை" - நினிவேயின் அழிவு தீர்மானம் பண்ணப்பட்டு விட்டது. அது அழிந்துபோகும். அதற்கு வேறு பரிகாரம் எதுவுமில்லை. நினிவே பல தேசத்தாரைப் பல காலமாக ஒடுக்கிற்று. ஆகையினால் நினிவே அழியும்போது மற்ற தேசத்தார் மகிழ்ச்சியடைவார்கள்.

3 அதிகாரம்

புத்தகத்தலைப்பின் முக்கியத்துவம்

புத்தக ஆசிரியரின் பெயராகிய நாகூம் என்னும் பெயரே இந்தப் புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாகூம் என்னும் பெயருக்கு "ஆறுதல்" என்பது பொருள்.

மிகச் சிறிய அதிகாரம்

2 (13 வசனங்கள்)

மிக நீண்ட அதிகாரம்

3 (19 வசனங்கள்)

மொத்த அதிகாரங்கள்: 3

முக்கிய வேதவசனம்

"கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார்......." (நாகூம் 1:3)

முன்னுரை

இந்தத் தீர்க்கதரிசன நூல் நினிவேயைக் குறித்து கூறப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகளாகும். யோனாவின் புஸ்தகம் இரக்கத்தைக் காண்பிக்கும் புஸ்தகம். ஆனால் நாகூம் புஸ்தகம் நியாயத் தீர்ப்பை வெளிப்படுத்தும் புஸ்தகம் ஆகும்.

நினிவே அசீரிய சாம்ராஜ்ஜியத்தின் தலைநகராமாக இருந்தது. அசீரியர்கள் வடக்கு ராஜ்ஜியத்தைக் கி.மு. 722-இல் கைப்பற்றினர். கி.மு. 765-ஆம் வருஷத்தில் யோனா அசீரியர்களிடம் பிரசங்கம் பண்ணி, தங்கள் தீயவழிகளிலிருந்து திரும்பிவருவதற்கு ஒருசந்தர்ப்பம் கொடுத்தார்.

அசீரியர்கள் மனந்திரும்பினார்கள். ஆனாலும், தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாக விரைவில் எழும்பினார்கள். அசீரியர்கள் இஸ்ரவேலர்களைச் சிறைப்பிடித்துச் சென்றபிறகு, நாகூம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை அவர்களுக்கு கூறினார். (சுமார் கி.மு. 630)

நாகூம் எல்கோசா ஊரைச் சேர்ந்தவன் (1:1). இது கப்பர் நகூமில் இருந்தது. இந்தப் பகுதியில் இயேசு கிறிஸ்து தமது ஊழியக்காலங்களில் அதிகமாக ஊழியம் செய்து வந்தார்.

புத்தகத்தின் பொதுவான சுருக்க வருணனை

1. கர்த்தருடைய பராக்கிரமமும் வருங்காலத்தில் நினிவேயின்மீது நியாயத்தீர்ப்பும் (அதிகாரம் 1)
2. நினிவேயின்மீது நியாயத்தீர்ப்பின் தொடர்ச்சி (அதிகாரம் 2)
3. நினிவே முழுவதுமாக அழிக்கப்படுதல் (அதிகாரம் 3)